## ராமச்சந்திரா மருத்துவமனையில்

# 79 வயது மூதாட்டிக்கு நவீன தொழில்நுட்பத்தில் இருதயத்தில் புதிய வால்வு பொருத்தி சாதனை



சென்னை, நவ. 21–

சென்னையைச் சேர்ந்த 79 வயது மூதாட்டிக்கு ஏற்பட்ட இதய வால்வு பிரச்னை, ரத்தக்குழாய் அடைப்பை அறுவைச் சிகிச்சை இல்லாமல் போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனை மருத்துவர்கள் சரிசெய்து சாதனை செய்துள்ளனர்.

இது குறித்து போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனை இதய அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் டி.ஆர். முரளிதரன், எஸ்.நாகேந்திர பூபதி, பி.வினோத், மயக்கவியல் நிபுணர் பி.ரஞ்சித் ஆகியோர் கூறியது:

சென்னையைச் சேர்ந்த 79 வயது மூதாட்டிக்கு இதயத்தில் முக்கிய வால்வில் கடும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அதே நேரத்தில் இதயத்துக்கு போகும் முக்கிய ரத்தக் குழாயிலும் கடுமையான அடைப்பு ஏற்பட்டிருந்தது. இந்த இரண்டு பிரச்னைகளும் மனிதர்களுக்கு சில விநாடிகளில் மரணத்தை ஏற்படுத்தக் கூடிய மோசமான வியாதியாகும். இதற்கு இதுவரை அறுவைச் சிகிச்சைதான் தீர்வாக இருந்தது. இந்த அறுவைச் சிகிச்சை மருத்துவர்களுக்கு மிகப்பெரிய சவாலானதாகும். அப்படி அறுவைசிகிச்சைமேற்கொண்டாலும் பின்விளைவுகளால் நோயாளிக்கு மரணம் ஏற்படலாம்.

எனவே, அனைத்து வழிகளிலும் முறையாக ஆய்வு செய்த பின்னர், தென்னிந்தியாவிலேயே முதன் முறையாக போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை ஏதுமின்றி தொடையில் இருக்கும் ரத்தக் குழாயில் துளையிட்டு ஊடுருவல் சிகிச்சை மூலம் குழாய் அடைப்பை சரிசெய்ததோடு, ஒரே நேரத்தில் புதிய செயற்கை வால்வையும் இதயத்தில் பொருத்தினோம்.

இப்படி இரண்டு சிகிச்சைகளையும் ஒரே நேரத்தில் செய்தது இதுவே முதல் முறை. மேலும் நோயாளி வயதானவர் என்பதால் மயக்க மருந்தை தீவிர ஆலோசனைக்குப் பிறகு, அவரது உடல் நிலைக்கேற்ப அளித்தோம். தற்போது அவர் சாதாரண நிலையில் உள்ளார்.

### அமெரிக்காவிலிருந்து ஸ்டென்ட்

நோயாளிக்கு தேவைப்பட்ட முக்கிய உபகரணமான ஸ்டென்ட் அமெரிக்காவில் இருந்து வரவழைத்து சிகிச்சை மேற்கொண்டோம். அதோடு இந்த சிகிச்சையை விரைவில் முதல்வரின் விரிவான காப்பீடுத் திட்டத்தில் இணைக்க உள்ளோம் என அந்த மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து இருதய சிகிச்சை மருத்துவர்கள் எஸ்.கேந்திர பூபதி, டி.ஆர்.முரளிதரன், ரஞ்சித், வினோத் ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது:–

மருத்துவமனைக்கு வந்த மூதாட்டிக்கு இருதயம் சம்பந்தமான பல்வேறு பிரச்சனைகள் இருந்துள்ளன. இவருக்கு இருதயத்துக்கு செல்லும் வலப்புற ரத்தக் குழாயில் ஸ்டென்ட்டு பொருத்தப்பட்டுள்ளது. மேலும் பலமுறை ஹார்ட் அட்டாக் ஏற்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார்.

இந்நிலையில் கடந்த 3 வாரங்களுக்கு முன் இருதயத்தில் ஏற்பட்ட அடைப்பு காரணமாக மருத்துவமனைக்கு வந்த மூதாட்டியின் இருதயத்தில் இடதுப்புறத்தில் செல்லக் கூடிய வால்வு பகுதியில் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதுடன் ரத்தக் குழாயிலும் அடைப்பு ஏற்பட்டிருப்பது தெரிய வந்தது. மிகவும் வயதான இவருக்கு அறுவை சிகிச்சை அளிப்பது பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் மருத்துவ குழுவினர் ஆலோசித்து மூதாட்டிக்கு புதிய தொழில்நுட்பத்தின் மூலம் நுண்துளை கருவியை தொடையின் மூலம் செலுத்தி இருதயத்தில் உள்ள ரத்தக் குழாயில் உள்ள அடைப்பை நீக்கி, புதிய வால்வும் பொருத்தப்பட்டுள்ளது. இனி மூதாட்டிக்கு இருதயம் சம்பந்தமான எந்த நோயும் வர வாய்ப்பில்லை. மேலும் இருதயத்தில் உள்ள ரத்தக் குழாயில் வால்வு பொருத்துதல் மற்றும் அடைப்பை நீக்குதல் போன்ற இரு சிகிச்சைகளும் ஒரே நேரத்தில் நடந்து தென்னிந்தியாவிலேயே இது முதல்முறையாகும். இது எங்கள் மருத்துவமனையின் சாதனையாகும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.